688/30

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 688/30 — 1991 නොවැම්බර් 15 වැනි සිකුරාදා — 1991.11.15

688/30 ஆம் இலக்கம் – 1991 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 10/80.

**1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்**

16 (2) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக் கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, தொழில், தொழிற்பயிற்சி அமைச்சர் டிங்கிரி பண்டா விஜேதுங்க ஆகிய நான் அவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஊழியம் தொடர்பில் 1991 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ஆம் நாள் இக்கட்டளை மூலம் நிர்ணயிக்கின்றேன்.

டி. பி. விஜேதுங்க.
தொழில், தொழிற் பயிற்சி அமைச்சர்.

கொழும்பு,
1991 நவம்பர் 14.

அட்டவணை

பத்து அல்லது அதற்கும் மேற்பட்ட ஆட்கள் தொழிலுக்கமர்த்தப்படும் நிறுவனமொன்றாகவிருக்கும், தரும நிறுவனமொன்றாக அல்லது முற்றுமுழுதாகவே சமய வழிபாடு அல்லது சமூகசேவை எனும் நோக்கத்திற்காகப் பேணப்பட்டுவரும் நிறுவனமொன்றாகவிருக்கின்ற ஏதேனும் தனியார்துறை பொறுப்புமுயற்சியின் சேவையிலுள்ள ஊழியம்.

11–677

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.